

கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் திருமண நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் அவர்களுடைய இல்லம் சென்று கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து மகிழ்ந்தார். நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வைக் குழுவின் பணிகள் குறித்து கேட்டறிந்து நம்மை அவர்கள் வாழ்த்தினார்கள். அமைச்சர் எ.வ.வேலு, கதிர் ஆனந்த் எம்.பி. ஆகியோர் உடனுள்ளனர்.

# பிப்.5-ல் சென்னையில் இசை விழா!

## இசைக் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது!

சென்னை, பிப்.4-

சென்னை இசை நகரம் எனும் யுனெஸ்கோ அறிவிப்பினைக் கொண்டாடும் வகையில் சென்னையில் இசை விழா நாளை (பிப்ரவரி 5 )தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது.

சர்வதேச அமைப்பான யுனெஸ்கோ சென்னையின் பாரம்பரியம் மிக்க செவ்வியல் இசையின் சிறப்புகளுக்கு பெருமை சேர்க்கும் வகையில் இசை நகரமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பினை கொண்டாடும் வகையில் கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் நாளை (பிப்ரவரி 5) சென்னை தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகத்தில் இசை விழா நடத்தப்படுகிறது.

காலை 11 மணியளவில் தவில் வலயப்பட்டி வழங்கும் நாதஸ்வர தவிலிசை நிகழ்ச்சியில் திருக்கோவிலூர்டி.பாலாஜி குழுவினர் நாதஸ்வரம். பத்மஸ்ரீ விருது பெற்ற, கலைமாமணி, சங்கீத கலாநிதி வலயப்பட்டி ஏ.ஆர்.சுப்பிரமணியம் சிறப்பு தவில் இசைக்கின்றனர். மதியம் 2.30 மணியளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் திரு.சசாங் சுப்பிரமணியம் குழுவினரின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை 6 மணியளவில் அபிஷேக் ரகுராம் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாலை 4.30 மணியளவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் விழா பேருரையாற்றி ஓவிய, சிற்பக்கலைஞர்களுக்கு கலைச் செம்மல் விருதுகளை வழங்குகிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இளம் கலைஞர்களுக்கு குரலிசை, கருவியிசை, பரத நாட்டியம், ஓவியம் மற்றும் கிராமிய கலைகளில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற 15 இளம் கலைஞர்களுக்கு பரிசுகளையும் வழங்குகிறார்கள்.

கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா. காந்தி வரவேற்புரையாற்றுகிறார். தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை.சந்திரசேகர், டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ்.சௌம்யா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், தமிழ்நாடு அரசு இசைப்பள்ளிகளின் கலையியல் அறிவுரைஞர் ஜாகிர் உசேன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கலை பண்பாட்டுத்துறை இணை இயக்குநர் திருமதி க.சிவசௌந்திர வல்லி நன்றியுரை வழங்குகிறார்.

## ஒரு பைசாகூட நிவாரண நிதி வழங்கவில்லை!

# தமிழ்நாட்டை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துவதா?

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஆவேசம்!

**புதுடெல்லி, பிப்.4-**

**தமிழ்நாட்டுக்கு புயல், மழை வெள்ள நிவாரண நிதியாக ரூ.37 ஆயிரம் கோடி கேட்டு பிரதமர் மோடி உள்ளிட்டோரை வலியுறுத்தியும், ஒன்றிய அரசிடம் இருந்து ஒரு பைசாகூட வரவில்லை என டி.ஆர்.பாலு நாடாளுமன்றத்தில் கூறினார்.**

**ஒன்றிய அரசின் பாராமுகம்**

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று நடைபெற்ற குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலுவும் பங்கேற்று பேசினார்.

அப்போது தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு பாராமுகம் காட்டுவதாக பல விஷயங்களை குறிப்பிட்டார்.



குறிப்பாக நீட் விலக்கு விவகாரம், வெள்ள நிவாரண நிதி, மதுரை எய்ம்ஸ், சென்னை 2ம் கட்ட மெட்ரோ பணி கள், சேது சமுத்திர திட்டம் உள்ளிட்டவற்றை சுட்டிக் காட்டி பேசினார்.

தமிழகத்தில் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட பகுதிகளை ஒன்றிய அமைச்சர்கள், அதிகாரிகள் குழு பார்வையிட்டதையும், ஏற்பட்ட சேதங்களுக்கு ரூ.37ஆயிரம் கோடி கேட்டு முதல் அமைச்சர், பிரதமர் மோடியை சந்தித்து வலியுறுத்தியதையும், அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் உள்துறை அமைச்சரிடம் நேரில் வற்புறுத்தியதையும் குறிப்பிட்ட டி.ஆர்.பாலு, இதுவரை ஒரு பைசா கூட வரவில்லை எனக்கூறி ஆதங்கப்பட்டார்.

**ஆளுநர்கள் விவகாரம்!**

மேலும் குடியுரிமை திருத்த சட்டத்தில் முஸ்லிம்கள், இலங்கை தமிழர்கள் சேர்க் கப்படாததை சுட்டிக்காட்டிய அவர், மேற்கு வங்காளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அவற்றை ஏற்கவில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

2014ம் ஆண்டு ஆண்டுக்கு 2 கோடி வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும் என பிரதமர் மோடி தெரிவித்ததாக கூறி குறிப்பிட்ட அவர், அப்படியெனில் இதுவரை 20 கோடி வேலை வாய்ப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கிறதா? என கேள்வி எழுப்பினார்.

இதுபோல ஜி.எஸ்.டி. திட்டத்தின் குறைகளை எடுத்துரைத்தார். சென்னை 2ம் கட்டமெட்ரோ திட்டத்துக்கு ஒன்றிய அரசு உதவவில்லை என குறை கூறினார். தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஓய்வூதியத்தை குறைந்தபட்சம் ரூ.3 ஆயிரமாக உயர்த்த கோரிக்கை விடுத்தார். இறுதியாக மாநில அரசுகளில் ஆளுநர்களின் தலையீடு விவகாரத்தையும் குறிப்பிட்டார்.

## ஜார்க்கண்ட் மாநில சட்டப்பேரவையில்

# பிப்.5 ஆம் தேதி நம்பிக்கை வாக்கெடுப்பு!

## ஜார்க்கண்ட் புதிய முதலமைச்சர் சம்பாய் சோரன் முடிவு!

ராஞ்சி, பிப்.4-

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி துணைத் தலைவர் சம்பாய் சோரன், ஜார்க்கண்ட் முதலமைச்சராக நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து, சட்டப்பேரவையில் 10 நாட்களுக்குள் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். அதன்படி நாளை (5ம் தேதி) அவர் சட்டப்பேரவையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த இருப்பதாக கூட்டணி கட்சியான காங்கிரஸ் தெரிவித்துள்ளது. இதை ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் மூத்த தலைவர் மனோஜ் பாண்டேவும் உறுதி செய்துள்ளார். தங்கள் கூட்டணிக்கு 48 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருப்பதாகவும், இதனால் நம்பிக்கை வாக்கெடுப்பில் எளிதில் வெற்றி பெறுவோம் என்றும் மனோஜ் பாண்டே குறிப்பிட்டுள்ளார்.

## விலை உயர்வால்

# நியாயவிலைக் கடைகளில் அரிசி தட்டுப்பாடு இல்லை !

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல் !

சென்னை, பிப். 4-

விலை உயர்வால் நியாய விலைக் கடைகளில் அரிசி தட்டுப்பாடு இல்லை என்று கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார். மேலும், நியாயவிலைக் கடைகளில்அரிசி போதிய அளவுக்கு இருப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவுத்துறை சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன உத்தரவுகளை, தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை அவர் வழங்கினார்.



அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

தலைநகரம் தொடங்கி கிராமம் வரை கூட்டுறவு சங்க வங்கிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறையில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. கூட்டுறவு துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

தேர்தல் அறிக்கையில் கூறியபடி விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடிசெய்யப்பட்டு வருகின்றன. ரூ.20,000 கோடி அளவுக்கு கடன்கள் தள்ளுபடிசெய்யப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில் ரூ.13,500கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நிகழ் நிதியாண்டு ரூ.16,000 கோடி அளவுக்கு பயிர்க்கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. அரிசி விலை உயர்வால் நியாய விலைக் கடைகளில் எந்தத் தட்டுப் பாடும் இல்லை. போதிய அளவு அரிசி இருப்புள்ளது என்று அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலர் கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## இ.எஸ்.ஐ.சி. திட்டத்தினை

# உழைக்கும் வர்க்கத்தினர் அனைவருக்கும் அமல்படுத்திடுவீர்!

## மாநிலங்களவை சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் - மு.சண்முகம் எம்.பி. வலியுறுத்தல் !

புதுடெல்லி, பிப். 4-

மாநிலங்களவையில் 02.02.2024 அன்று கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான மு.சண்முகம் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசினார். அப்பொழுது அவர் பேசியதாவது:-

தற்பொழுது ஒரு தொழிலாளி ரூபாய் 21,000க்கு மேல் ஊதியம் பெற்றால் அவர்களுக்கு இ.எஸ்.ஐ.சி இல் மருத்துவ வசதிகள் கிடைக்காது. 21,000 ரூபாய் மாத ஊதியம் என்பது தற்பொழுது சாதாரணமாக உள்ளது. எனவே பெரும்பாலான தொழிலாளர்களும் இந்த இ.எஸ்.ஐ.சி. திட்டத்தில் இருந்து வெளியே வந்து விடுகின்றனர். இத்திட்டம் தொடர்வதற்கு இ.பி.எப்..இல் உள்ளது போல ரூபாய் 21,000/- அனைவருக்கும் கட்டாயமாக்கி இ.எஸ்.ஐ.சி. பலனை அனைவரும் பெறும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும்.

இதனால் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பணப்பலனும் கூடுதலாக கிடைக்கும்.

அதேபோல இ.எஸ்.ஐ.சி. 1950 விதி எண் 52-ன் படி நாள் ஒன்றுக்கு சராசரியாக 172 ரூபாய்க்கு குறைவாக ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பங்கினை செலுத்த வேண்டிய அவசியமில்லை. அதன்படி பார்த்தால் அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் சராசரியாக அந்த ரூபாய் 172-ஐ விட குறைவாக கிடைப்பதால் அனைவரையும் இ.எஸ். ஐ.சி. திட்டத்தின் கீழ் கொண்டு வந்து இ.எஸ். ஐ.சி. திட்டத்தின் பலனை அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரும் பெறும் வகையில் ஏற்பாடு செய்வதற்கு அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு கழக உறுப்பினர் மு.சண்முகம் வலியுறுத்திப் பேசினார்.

## பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பரப்புரைப் பயணம் !

## பிப்.12 முதல் 24ந் தேதி வரை நடைபெறுகிறது!

சென்னை, பிப். 4-

பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், அனைத்துத் தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் தலைமையில் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாப் பரப்புரையுடன் 32-ஆம் ஆண்டு ஊர்திப் பயணம் (இரத யாத்திரை) கன்னியாகுமரி முதல் சென்னை வரை 12.02.2024ந் தேதி தொடங்கி 24.02.2024 வரை நடைபெறுகிறது.

12.2.1993-ஆம் நாள் கன்னியாகுமரி சென்னை 50 நாட்கள் தமிழ்நாட்டில் தமிழுக்கு முதன்மை வேண்டும். பயணம் 50 நாட்கள் நடந்தோம். தொடர்ந்து கடந்த 31 ஆண்டுகளாக நாம் நடத்தி வந்த 'தமிழ் நாட்டில் தமிழுக்கு முதன்மைப் பயணமும்,' கன்னியாகுமரி இமயம் - தில்லி தமிழ்ப் பரப்புரை தமிழர் உரிமைப் பாதுகாப்புப் பயணமும் கண்ணகி சிலையை மீண்டும் வைத்திடக் கண்ணகி சுடர்ப் பயணம் தமிழ்ச் சுடர் ஏந்தி ஓட்டப் பயணம், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்ற வேண்டுதல் பயணம் நிறைவடைந்த நிலையில், நம் தமிழ்ப் பயணம் இந்த ஆண்டும் தொடர்கிறது.

இந்த ஆண்டு, கலைஞர்; தமிழ்நாட்டிற்கு செய்த தொண்டறத்தை மக்கட்கு எடுத்துக் கூறிப்போற்றுதலோடு 32-ஆம் ஆண்டு தொடங்கும் இத்தமிழ்ப் பயணம்அடியில்குறிப்பிட்டவாறு தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிற்றூர், பேரூர்களில் வழித் தடத்தில் மக்களைச் சந்தித்து நம் தாய்த் தமிழ் மொழியை நம் தமிழ்நாட்டில் முதன்மைப்படுத்தும் கொள்கைகளை வலியுறுத்தும் தமிழூர்திப் பயணத்தை மேற்கொள்ள உள்ளோம். இவ்வாண்டுத் தொடர் பயணமும் எப்போதும் போல் நடைபெறுகிறது. நன்மக்கள் ஆதரவு தர வேண்டுகிறோம்.

**32 –ஆம் ஆண்டு நிகழ்வுப் பயணம்**

12.2.2024 - கன்னியாகுமரி காலை 9 மணி - வள்ளியூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, - தூத்துக்குடி தங்குதல்.

13.2.2024 - தூத்துக்குடி - எட்டயபுரம், கோயில் பட்டி, கழுகுமலை, சங்கரன்கோயில், முறம்பு பாவாணர் கோட்டம், இராச பாளையம் - இராச பாளையம் தங்குதல்.

14.2.2024 - இராசபாளையம் - திருவல்லிபுத்தூர், சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, மதுரை - மதுரை தங்குதல்.

15.2.2024 - மதுரை - திருப்பத்தூர், திண்டுக்கல், கரூர் - கரூர் தங்குதல்.

16.2.2024 - கரூர் - ஈரோடு 100 கவிஞர்கள் கலைஞர் நூற்றாண்டு விழா - கரூர் தங்குதல்.

மேற்கண்டவாறு பரப்புரை பயணம் நடைபெறுகிறது.



மன்னார்குடியில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கழக பொருளாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர்.பாலு உரையாற்றினார். மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மொழிப்போர்த் தியாகி இரா.தென்னவன், அவைத்தலைவர் தன்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், தொகுதி பொறுப்பாளர் துரை.கி.சரவணன், அறங்காவல் குழு தலைவர் சி.இளவரசன், நகர செயலாளர் வீரா கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.